வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

தமிழ்அகராதிகளின் கட்டமைப்பும் தலைச்சொல் வைப்புமுறையும்

செ.நான்சி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, புனித சிலுவை கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் - தமிழ், தமிழ் - பிறமொழிகள், பிறமொழிகள் - தமிழ் என்னும் மூன்று வகைப்பாடுகளில் தமிழில் அகராதிகள் பெருகி வருகின்றன. நாளும் உருவாகி வருகின்ற பல்துறை சார்ந்த அகராதிகளும் கலைக்களஞ்சியங்களும் அகராதியியலின் பரப்புக்கு உட்பட்டவையே ஆகும். இத்தகைய வளர்ச்சிநிலையில் உருவாகித் தற்போது பயன்பாட்டில் உள்ள அகராதிகள் தமிழ் மொழியின் வளமையைப் பறைசாற்றுவனவாக அமைகின்றன. சொற்களுக்குப் பொருள் உரைக்கும் ஒவ்வொரு அகராதிகளும் அவற்றை அடியொற்றிக் கட்டமைப்பு, சொற்பொருள்நிலை என்னும் இரண்டு இயல்புகளைக் கொண்டு அமைந்துள்ளன வரையறுக்கப்பட்ட கட்டமைப்பு என்பது அனைத்து அகராதிகளுக்கும் பொருந்துவதாக உள்ளது. இவற்றுள் கட்டமைப்பின் கூறுகள் தமிழ் அகராதிகளில் கையாளப்பெற்றுள்ள திறத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவு சொற்கள்

புறக்கட்டமைப்பு, பெருங்கட்டமைப்பு, நுண்கட்டமைப்பு, அகராதியியலாளர், முகப்புப்பக்கம், தலைச்சொல், வைப்புமுறை, அகரவரிசை, வட்டார வழக்கு, கலைச்சொல்லாக்கம்

முன்னுரை

அகராதிகள் பொதுவாக அவற்றின் பயனாளரின் தேவை, அகராதியியலாரின் அறிவு அல்லது கற்பனை, மொழியின் பொதுப் பயன்பாடு பற்றியும் குறிப்பிட்ட சொற்களின் பயன்பாடு பற்றியும் அகராதியியலாளர்; கொண்டுள்ள தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகின்றன. பயனாளரின் விருப்பத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல் அகராதியியலாளரால் எதனை வழங்க முடியுமோ அதன் அடிப்படையில் தான் அகராதிகள் வடிவமைக்கப்படுகின்றன. தேவைகளைப் பற்றிய ஆய்வுகளும் பயனாளரின் திறன்களும் பயனாளருக்கு ஏற்ற அகராதிகளை உருவாக்குவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. ஒரு அகராதியின் கட்டமைப்புப் பற்றி பயனாளர் அறிந்திருந்தால் அவரால் விரும்புகின்ற தகவலை விரைவாகவும் துல்லியமாகவும் கண்டறிய முடியும். ஏனெனில் எந்தவொரு அகராதியும்

வரையறுக்கப்பட்ட கட்டமைப்பைப் பெற்றிருக்கும் என கருதப்படுகிறது. இத்தகைய நிலையில் தமிழில் தற்காலப்பயன்பாட்டில் உள்ள அகராதிகள் பெற்றுள்ள கட்டமைப்பு குறித்தும் அவற்றுள் புறக்கட்டமைப்பு, பெருங்கட்டமைப்பு என்னும் இரண்டு கூறுகளைக் குறித்தும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

அகராதியின் ஒட்டுமொத்த கட்டமைப்பு

“மக்கள் பயன்படுத்துகின்ற சொற்களின் தொகுப்பே அகராதி.. அகராதி இயற்றும் கலை மிகப் பழமையானது. மொழிகள் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அவை மாறிக்கொண்டே வளருகின்றன. (முத்துச்சண்முகன் (1998), ப.296) இத்தகைய அகராதியின் ஒட்டுமொத்த கட்டமைப்பு முதன்மைப்பகுதி, புறக்கட்டமைப்பு ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதன்மைப்பகுதி என்பது பெருங்கட்டமைப்பு, நுண்கட்டமைப்பு ஆகிய இரு வகைகளாகப் பாகுபாடு செய்யப்படுகின்றது. அகராதியின் புறக்கட்டமைப்பு என்பது முகப்புச்செய்தி, இணைப்புச்செய்தி ஆகியவற்றின் தொகுப்பாகும்.

புறக்கட்டமைப்பு

அகராதியின் அட்டையை வடிவமைப்பதில் தொடங்கிப் பின்னிணைப்புகளைத் தயாரிக்கின்ற வரை புறச்செய்திகள் பரவிக் காணப்படுகின்றன. புறச்செய்திகளின் உள்ளடக்கமானது அகராதியின் வகை, அளவு, உள்ளடக்கம் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடக் கூடியது. பெம்பாலான அகராதிகள் முகப்புச் செய்தியைப் பெற்றுள்ள போதிலும் சில அகராதிகள் இணைப்புச் செய்திகள் இல்லாமலும்; காணப்படுகின்றன.

அ) முகப்புச் செய்திகள்

அகராதியியலாளர் சாதிக்க விரும்புவதை வெளிப்படுத்தக் கூடியதாய் அகராதிகளின் முகப்புச்செய்தி அமைகின்றது. எந்தவொரு அகராதி அல்லது சொற்களஞ்சிய தொகுதிகளின் முகப்புச் செய்தியானது பயனாளர் அகராதியைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும் தோற்றுவாயையும் கொண்டதாக இருக்கும். இது இன்றியமையானதாகக் கருதப்பட்டாலும் சில நேரங்களில் பயனாளர்களாலும் மதிப்புரையாளர்களாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இது அகராதியின் நடை, கட்டமைப்பு, உள்ளடக்கம் ஆகியவற்றை விவரிக்கிறது.

“புதிதுபுதிதான கலைச்சொல்லாக்கம் தொடர்ந்து நடைபெறும்போது மொழியின் வளர்ச்சிக்கு அடிப்படையான சொற்களஞ்சியம் விரிவடைந்திடும். அப்பொழுதுதான் இன்றைய தகவல் மேலாண்மை உலகில், பல்வேறு அறிவியல், தொழில்நுட்பப் போக்குகளையும் ஆய்வுகளையும் தமிழில் மொழிபெயர்க்கவியலும். இந்நிலைமை தொடரும்போது

இரண்டாயிரமாண்டு வரலாற்றுப் பழமையான தமிழ்மொழியானது அண்மைக்காலத்தினுக்கேற்ப புத்தெழுச்சி பெறும்” என்னும் கூற்று அகராதியியலாளரின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. (ந.முருகேசபாண்டியன் (2016), ப.100) அகராதியின் முகப்புச் செய்தியானது கீழ்க்கண்ட கூறுகளுள் அனைத்தையுமோ அல்லது சிலவற்றையோ உள்ளடக்கியுள்ளது.

- அட்டையின் வடிவமைப்பு.
- ஆசிரியர், பதிப்பகம், பதிப்பாளர் ஆகிய தகவல்களைக் கொண்ட தலைப்புப் பக்கம்
- உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் அட்டவணை.
- குறிப்பிட்ட பதிப்புக்கான முகவுரை.
- அகராதியின் புறத்தோற்றம் மற்றும் அகராதியின் உருவாக்கத்தில் பின்பற்றப்பட்டுள்ள ஆசிரியரின் கொள்கைகள்.
- மொழியைப் பற்றிய பொதுவான தகவல்
- வட்டார வழக்கு அகராதிகளில் இடம்பெறும் அவ்வட்டாரத்தைக் குறிப்பிடும் வரைபடம்.
- அகராதி உருவாக்கத்தில் பயன்படும் சுருக்கக் குறியீடுகளுக்கான விளக்கங்கள்
- எழுத்திலக்கணம் பற்றிய விரிவான குறிப்புகள்
- வெளியீட்டு முறை பற்றிய விளக்கம்

மேற்கண்ட முகப்புச் செய்திகளுள் சில மட்டுமே தமிழ் அகராதிகளில் கையாளப்பட்டுள்ளன.

1. அட்டையின் வடிவமைப்பு

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, நர்மதாவின் தமிழ் அகராதி ஆகிய இரு அகராதிகள் மட்டுமே தங்களை இருமொழி அகராதிகளாக அட்டையில் அடையாளம் காட்டுகின்றன. ஏனைய அகராதிகளான திருமகள் தமிழகராதி, கௌரா தமிழ் அகராதி, லியோலின் தமிழ் அகராதி, கோனார் தமிழ் அகராதி, பூம்புகார் தமிழ் அகராதி, உமா தமிழ் அகராதி ஆகியன தமிழ்- தமிழ் என்னும் நிலையில் ஒரு மொழி அகராதிகளாகவே அட்டையின் வடிவமைப்பில் குறிப்பிடப்படுகின்றன.

2. உள்ளடக்க அட்டவணை

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் மட்டும் அகராதி விரிவாக்கம், அகராதியின் புதிய பதிப்பில் தற்காலத் தமிழ் இலக்கண விளக்கம்இ பயன்படுத்தியிருக்கும் சுருக்கக் குறியீடுகள்,

அகராதிப்பதிவின் அமைப்பு, அகராதியைப் பயன்படுத்த உதவும் குறிப்புகள், தமிழ் எழுத்து அகரவரிசை அகராதி ஆகியன உள்ளடக்க அட்டவணையின் கூறுகளாக இடம்பெற்றுள்ளன. ஏனைய அகராதிகள் பதிப்பாசிரியர் அல்லது தொகுப்பாசிரியர் பற்றிய குறிப்புகளையும் பதிப்பகம் மற்றும் பதிப்பு பற்றிய விவரங்களை மட்டுமே கொண்டுள்ளது.

3. முகவுரை

“முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்

புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்” (நன்.எழு.1)

பாயிரத்தின் பெயர்களைப் பவணந்தி முனிவர் முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் ஏழு பெயர்களாகக் குறிப்பிடுகின்றார். அதில் முகவுரை என்பது நூலுக்கு முன் உரைக்கப்படுவது என்று அறியப்படுகிறது. அகராதிகளிலும் நூலுக்கு முன்னால் முகவுரை இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் தற்காலப் பயன்பாட்டில் உள்ள அனைத்துத் தமிழ் அகராதிகளிலும் மொழியின் தன்மை, தமிழின் சிறப்பு, அகராதி குறித்த கருத்தாக்கங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளதோடு தத்தம் அகராதிகளின் சிறப்புத் தன்மையும் சுட்டப்பெற்றுள்ளன.

நர்மதாவின் தற்காலத் தமிழ் அகராதி

1.முற்காலந்தொட்டு வழங்கிவரும் உயர்தனிச் செம்மொழிச் சொற்களுக்குப் பொருள் கூறல்.

2.புழங்கு தமிழ்ச் சொற்களுக்கு உடுக்குறி (நட்சத்திரக்குறி) இட்டுப் பொருள் கூறல்.

3.தமிழில் வழங்கும் பல்வேறு திசைச் சொற்களுக்கும் முடிந்தவரை சரியான பொருள் காணல்.

4.தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் வரிசையில் பொருள் கூறல்.

5.பல்வேறு துறைச் சொற்களுக்கும் பொருள் கூறல் (உயிரியல், தாவரவியல், வேதியியல், பௌதிகவியல், வணிகவியல், கணிதவியல், கணினி, காய்கறிகள் போன்றவை)

6.தமிழ்ச் சொற்களின் பொருளை எளிதாக உணர ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துதல்.

7.சொற்கள் சிலவற்றைச் சான்றுக்காக வாக்கியங்களில் அமைத்துக் காட்டல். (ப.6)

என்று தம் அகராதியின் சிறப்பை வரிசைப்படுத்தியுள்ளதைச் சான்றாகச் சுட்டலாம்.

பேச்சுத் தமிழில் ஒரே சொல்லுக்குப் பல நுண்மையான வேறுபாடுகள் நிலவுகின்றன. அந்த வேறுபாடுகள் வழங்கப்படும் சூழ்நிலைக்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றன. இந்த

நுண்ணிய வேறுபாடுகளைப் பதிவு செய்வதையும் லியோவின் அகராதி தம் நோக்கமாகக் குறிப்பிடுகிறது.

“இது தமிழ் - தமிழ் அகராதி என்றாலும் தமிழை இரண்டாவது மொழியாகப் பயில்வோருக்கும் உதவும் பொருட்டு ஆங்கிலத்திலும் பொருள் தரப்பட்டுள்ளது” என்று கிரியாவின் தற்காலத் தமிழகராதி பெருமிதம் கொள்கிறது. மேலும் அகராதியில் கையாளப்பெற்றுள்ள சுருக்கக்குறியீடுகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் சுட்டியுள்ளது.

ஆ) இணைப்புச் செய்திகள்

அகராதியின் அளவு மற்றும் எல்லையைப் பொறுத்து இணைப்புச் செய்தியில் மொழியியல் தகவல்களும் கலைக்களஞ்சிய தகவல்களும் இடம்பெறலாம். பின்வரும் கூறுகளுள் அனைத்துமோ சிலவோ இணைப்புச் செய்தியில் இடம்பெறலாம்.

- எண்கள், வாரத்தின் நாட்கள், மாதங்கள், பருவங்கள் போன்ற அட்டவணைகள்
- முன்னொட்டுகள் மற்றும் பின்னொட்டுக்களின் பட்டியல்.
- நிறுத்தல் அளவைகள், பிற அளவீடுகள், இராணுவ பொறுப்புகள், தனிமங்கள், தொழிற்நுட்ப கலைச்சொற்கள், சட்டம் மற்றும் அரசியலமைப்பின் கலைச்சொற்கள் போன்றவை
- தனிப்பட்ட பெயர்கள், குடும்ப பெயர்கள், இடப்பெயர்கள் போன்ற சிறப்புப் பெயர்ச்சொற்களின் அட்டவணை
- சொற்றொடர்கள், பொருண்மையியல் கூறுகள், பயன்பாட்டில் இல்லாத சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்பு பின்னிணைப்பு
- அடிக்கடி கையாளப்படும் பழமொழிகள் மற்றும் மேற்கோள்கள்;.
- அகராதி உருவாக்கத்திற்குப் பின் ஏதேனும் பிழைகள் கண்டறியப்பட்டால் அவற்றின் பட்டியல் இணைப்புச் செய்தியில் இடம்பெறலாம். இது திருத்த அட்டவணை என்று அழைக்கப்படுகிறது.
- இணைப்புச் செய்தியில் துணைநூற்பட்டியல் இடம்பெற வேண்டும்.
- தற்போதைய அகராதியில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள அல்லது கையாளப்பட்டுள்ள முந்தைய வெளியீடுகளான அகராதிகளின் பட்டியல் இடம்பெற வேண்டும்.

ஆனால் தமிழின் தற்கால அகராதிகளுள் இத்தகைய இணைப்புச்செய்திகள் எவையும் இடம்பெறவில்லை.

அகராதிகளின் முதன்மைப் பகுதி

அகராதியின் நடுப்பகுதியே முதன்மைப் பகுதியாக அறியப்படுகிறது. அது பெருங்கட்டமைப்பு, நுண்கட்டமைப்பு என்னும் இரண்டு வகைகளாக உள்ளது. முகப்புச் செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் பயனாளருக்குத் துணைபுரியும் வகையில் அகராதியின் உள்ளடக்கச் செய்திகள் அமைந்துள்ளன. பெருங்கட்டமைப்பு என்பது அகராதியில் உள்ள மொழிக்கூறுகளின் வரிசையையும், ஒருங்கிணைப்பையும் குறிப்பிடுகிறது. அகராதி பதிவின் உள்கட்டமைப்பே அகராதியின் நுண்கட்டமைப்பு எனப்படுகிறது. சொற்களின் பதிவைக் குறித்த விவரங்கள் எத்தகைய முறையில் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன என்பதை இது குறிக்கிறது. எழுத்துக்கள், உச்சரிப்பு, ஒலிபெயர்ப்பு, தொனிகுரல் ஏற்ற இறக்கம், இலக்கணக் கூறுகள், சொற்பொருள் மாற்றம், சொற்பொருள் பிரிவு, பெயர்ச்சொல், பொருள் வரையறை, வெவ்வேறு விதமான பொருண்மைகள், அருஞ்சொற்பொருள், எதிர்ச்சொல், ஒப்புமைப் சொற்கள், தொடர்கள், துணைசெய்கின்ற அல்லது தொடர்புடைய மரபுத்தொடர்கள், பழமொழிகள், மேற்கோள்கள், எடுத்துக்காட்டுகள், பயன்பாடு, பொருள் உணர்த்தும் முறை, பயன்பாட்டு நிலை, விளக்கப்படங்கள் ஆகியன நுண்கட்டமைப்புக் கூறுகளாகும்.

பெருங்கட்டமைப்பு

பெருங்கட்டமைப்பு என்பது அகராதியியலாளர் தகவல்களை அகராதியில் இடம்பெறச் செய்வதற்கு அனுமதிக்கும் ஒட்டுமொத்த கட்டமைப்பைக் குறிக்கிறது. சொல்நிரல் என்று இதனைக் குறிப்பிடலாம். அகராதியில் உள்ள பதிவுகள் குறிப்பிட்ட ஒழுங்கமைப்பில் வரிசைப்படுத்தப்படுவனவாகவும் அகராதியின் நோக்கத்திற்கும் பயனுக்கும் ஏற்ப வடிவமைக்கப்படுவனவாகவும் இருக்க வேண்டும்.

பெருங்கட்டமைப்பு என்பது சொற்களின் வரிசை முறையை அளிக்காமல் குறிப்பிட்ட சொல்லைத் தேவை எனில் சேர்க்கவும், நீக்கவும் வாய்ப்புத் தருகின்ற நெகிழ்வு தன்மைப் பொருந்திய கட்டமைப்பாகும். தலைச்சொல்லானது ஒரு புதுச்சொல் தெரிவைக் குறிப்பிடுகின்றது. அகராதியின் அளவு, இயல்பு, நோக்கம் ஆகியவற்றைப் பொருத்து ஆசிரியர் மேலும் சில தகவல்களை இணைத்துக் கொள்ளலாம். பெரிய வடிவிலான அகராதிகளில் காரணகாரியத்தோடு விளக்கப்படுவதாகவும் சிறிய கையடக்க அகராதிகளில் குறிப்பிட்டுச் சொல்லப்படுவதாகவும் தலைச்சொல் அமைகிறது.

பொதுவாக அகராதிகள் அகர வரிசைப்படி அமைக்கப்படுவது இயல்பு. எடுத்துக்காட்டாக ஆங்கில அகராதிகளில் A to Z வரையிலான முறையில் எழுத்துக்கள் தொகுக்கப்படுகின்றன.

அங்கு vowels, consonants என்னும் நிலையில் எழுத்துக்கள் வகைப்படுத்தப்பட்டாலும் அகராதி தொகுப்பு முறையில் அகர வரிசை முறையே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தமிழில் மரபிலக்கணங்களுள் தொன்மையானதாகிய தொல்காப்பியம்,

“எழுத்தெனப் படுவ அகர முதல னகர இறுவாய்

முப்பஃதென்ப சார்ந்துவரல் மரபின்

மூன்றலங் கடையே”

என வரையறைப்படுத்துகிறது. மேற்கண்ட வரையறையை அடியொற்றி தமிழின் நெடுங்கணக்கானது உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு, மெய்யெழுத்துக்கள் பதினெட்டாக முப்பது எழுத்துக்களே முதலெழுத்துக்களாக அறியப்படுகின்றன. இத்தகைய இலக்கண மரபுக்கேற்பத் தமிழ் அகராதிகளில் ‘அ’ முதல் ‘ஔ’ வரையிலான எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் முதலில் வரிசைப்படுத்தப்படுகின்றன.

தலைச்சொல்லின் முதலெழுத்து வைப்புமுறை:

தமிழ்மொழியின் மரபிலக்கணங்கள் தலைச் சொல்லின் முதலெழுத்தைத் தான் மொழிமுதல் எழுத்துக்கள் என்கின்றனர். எனவே மரபிலக்கணங்கள் குறிப்பிடுகின்ற மொழிமுதல் எழுத்துக்களே முதலெழுத்தாக அமையும் வகையில் அகராதிகளின் தலைச்சொற்கள் அமைகின்றன. இவ்வாறு தமிழ் இலக்கணத்திற்கு ஏற்பக் கீழ்க்கண்ட முறைகளில் வரிசைப்படுத்தப்படுகின்றன.

1. ‘அ’ முதல் ‘ஔ’ வரையிலான எழுத்துக்களை முதலாக கொண்ட சொற்கள்.
2. ககர வரிசையில் அமைந்துள்ள எழுத்துக்களை முதலாக கொண்டுள்ள சொற்கள்.
3. வடமொழி எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள்.

தலைச்சொல்லின் முதலெழுத்தைத் தொடரும் எழுத்துக்களின் வைப்புமுறை:

தலைச்சொல்லின் முதலெழுத்தை அடுத்து வரக்கூடிய எழுத்துக்களைத் தமிழின் மரபிலக்கணங்கள் மொழிஇடை எழுத்துக்கள், மொழி இறுதி எழுத்துக்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. முதலெழுத்தை அடுத்த வருகின்ற எழுத்துக்களை அகராதியில் இடம்பெற செய்யும் போது பின்வரும் வைப்புமுறை பின்பற்றப்படுகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் வரிசையில் உள்ள உயிரெழுத்துக்கள் முதலெழுத்தாக அமையும் வகையில் சொற்கள்

இடம்பெற்றுள்ளன. இதே போன்றே உமா தமிழ் அகராதி, லியோவின் தமிழ் அகராதி, நர்மதா தமிழ் அகராதி, திருமகள் தமிழ் அகராதி, கௌரா தமிழ் அகராதி, பூம்புகார் தமிழ் அகராதி, கோனார் தமிழ் அகராதி போன்ற அகராதிகளிலும் இடம்பெற்றுள்ளன.

க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, லியோவின் தமிழ் அகராதி நர்மதா தமிழ் அகராதி, உமா தமிழ் அகராதி போன்ற அகராதிகளில் மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து உயிர்மெய்யெழுத்துக்கள் இடம்பெறும் வகையில் சொற்கள் அமைந்துள்ளன. ஆனால் மற்ற அகராதிகளான கோனார் தமிழ் அகராதி, பூம்புகார் தமிழ் அகராதி, கௌரா தமிழ் அகராதி, திருமகள் தமிழ் அகராதிகளில் உயிர்மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து மெய்யெழுத்துக்கள் இடம்பெறும் வகையில் சொற்கள் அமைந்துள்ளன.

வடமொழி எழுத்துக்களின் வைப்பு முறை

இன்றைய இந்தோ- ஆரிய மொழிகளின் தாயாகக் கருதப்படுகிற சமஸ்கிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்ட(பழைய இந்தோ- ஆரியன்)இந்தோ- ஆரியர்கள் இந்திய நாடு வருவதற்கு முன்னமேயே திராவிட மொழியினர் இந்நாடு முழுவதும் பரந்து வாழ்ந்திருந்தனர். இவ்வாரியர்கள் வந்தபோது இரு மொழியினரும் வடக்கே கலந்து உறவாடினர் என்பதும் எனினும் அத்தகையதொரு பெரும்கலப்பு தெற்கே ஏற்படவிலலை என்பதும் உண்மை. ஆனால் காலம் செல்லச் செல்லத் தெற்கே வாழ்ந்த மக்களின் மொழியிம் சமஸ்கிருத மொழியின் செல்வாக்கு படிப்படியாக வளர்ந்து வந்திருத்தலைக் காணலாம். சமயம் இ வாழ்வுச்சடங்குகள் போன்றவற்றில் எல்லாம் சமஸ்கிருதமொழியின் செல்வாக்கு ஊடுருவி உறுதியாக நின்றிருத்தல் கண்கூடு. (ச.அகத்தியலிங்கம் (2000), ப.38) இவ்வாறு செல்வாக்கு பெற்ற வடமொழி எழுத்துக்களை அகராதிகள் கையாளும் முறை பின்வருமாறு அமைகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் ஜ, ஜோ, ஸ்ரீ, ஷ, ஷோ, ஸ், ஸ, ஹ, ஹா, ஹோ, என்னும் வரிசையிலும் திருமகள் தமிழகராதியில் ஜ, ஸ்ரீ, ஷ, ஸ், ஹ என்னும் வரிசையிலும் கௌரா தமிழ் அகராதியில் ஸ்ரீ, ஸ், ஷ, ஹ, ஹா, ஹி, ஹே, ஹீ, ஹை என்னும் வரிசையிலும் பூம்புகார் தமிழ் அகராதியில் ஸ்ரீ, ஜ், ஸ் என்னும் வரிசையிலும் வடமொழி எழுத்துக்களை முதலாக கொண்ட சொற்கள் இடம்பெற்றுள்ளன. உமா தமிழ் அகராதி, லியோவின் தமிழ் அகராதி, நர்மதாவின் தமிழ் அகராதி போன்ற அகராதிகளில் வடமொழி எழுத்துக்கள் இடம்பெறவில்லை.

தலைச்சொல்லின் முதலெழுத்தைத் தொடரும் எழுத்துக்களின் வைப்புமுறை

தலைச்சொல்லின் முதலெழுத்தை அடுத்து வரக்கூடிய எழுத்துக்களை தமிழின் மரபிலக்கணங்கள் மொழியிடை எழுத்துக்கள், மொழியிறுதி எழுத்துக்கள் என்று வகைப்படுத்துகின்றன. முதலெழுத்தை அடுத்து வருகின்ற எழுத்துக்களை அகராதியில் இடம்பெற செய்யும் போது பின்வரும் வைப்புமுறை பின்பற்றப்படுகிறது.

தலைச்சொல்லின் முதலெழுத்தை அடுத்து வரும் எழுத்து ஃ, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்னும் வரிசையில் அமைகிறது. இதில் மெய்யெழுத்துக்களின் வரிசைஇ உயிர்மெய்யெழுத்துக்களின் வரிசை, க், க, கா......... என்று தொடங்கி னௌ என்ற நெடுங்கணக்கு முறையில் அமைகிறது.

இத்தகைய கட்டமைப்பினைப் பெற்றுள்ள தமிழ் அகராதிகள் பயணிக்கவேண்டிய தொலைவு இன்னும் அதிகமாக உள்ளது என்பது தெளிவாகிறது. “தீங்கற்ற அடிமைவேலை எனப்பெறும் அகராதி உருவாக்கப்பணி பற்றி இருவிதச் சிந்தனைகள் உள்ளன. மிகக் கொடிய குற்றவாளிகளைத் தூக்கில்போட்டோ அல்லது கடினமான வேலைகளைச் செய்யச் சொல்லியோ தண்டிக்கவேண்டாம். ஆனால் அவர்களை அகராதிகளைத் தொகுக்கச் சொல்லித் தீர்ப்பளிக்கலாம்” (பெ.மாதையன் (1997), ப.எiii) என்னும் ஸ்கேலிஜா கூற்று அகராதியின் கட்டமைப்பு குறித்த சவால்களைச் சுட்டுகிறது

தொகுப்புரை

தமிழ் அகராதிகள் அகராதியியல் முன்வைக்கின்ற புறக்கட்டமைப்புக் கூறுகளுள் முகப்புச்செய்திகளை மட்டுமே பெற்றுக் காணப்படுகின்றன. முதன்மைப்பகுதிகளுள் ஒன்றாக அறியப்படுகின்ற பெருங்கட்டமைப்பு தலைச்சொல்லின் வைப்புமுறை, தலைச்சொல்லின் இரண்டாம் எழுத்து வைப்புமுறை, வடவெழுத்துச் சொற்களின் வைப்பு முறை என்னும் நிலைகளில் அமைந்துள்ளது. மேலும் ஆங்கில அகராதிகளைப் போன்று அகரவரிசையில் அமையாமல் தமிழிலக்கண மரபுக்கேற்க உயிர் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் ஆகிய மூன்று வகைப்பாட்டின் அடிப்படையில் தலைச்சொற்கள் அகரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன. எனினும் தமிழ் அகராதிகள் இன்னும் கட்டமைப்பில் கவனம் செலுத்தவேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

துணைநின்ற நூல்கள்

1. அகத்தியலிங்கம்.ச.,திராவிட மொழிகள்-1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, மறுபதிப்பு,2000

2. மாதையன்.பெ., அகராதியியல், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1997.

3. முத்துச்சண்முகன், இக்கால மொழியியல், முல்லை நிலையம், சென்னை-17, 1998

4. முருகேசபாண்டியன்.ந, மொழிபெயர்ப்பியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016